## சிறப்புக் குறிப்பு 13
## முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும்[1]

### நாணயக் கொள்கை

2018 ஏப்பிறல் 04 - துணைநில் வைப்பு வசதி வீதம் 7.25 சதவீதமாக மாற்றமின்றிப் பேணப்பட்ட வேளையில், துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமானது 25 அடிப்படைப் புள்ளிகளால் 8.50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. இந்த தீர்மானமானது துணைநில் வீத வீச்சின் அகலத்தை 150 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 125 அடிப்படைப் புள்ளிகளாகக் குறைத்தது.

2018 நவெம்பர் 14 - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீது பிரயோகிக்கப்படும் நியதி ஒதுக்கு விகிதமானது 2018 நவெம்பர் 16இல் ஆரம்பிக்கின்ற ஒதுக்கு பராமரிப்புக் காலத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 7.50 சதவீதத்திலிருந்து 6.00 சதவீதத்திற்கு 1.50 சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்டுள்ளது.

- துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் 50 அடிப்படைப்புள்ளிகளால் 9.00 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் துணைநில் வைப்பு வசதி வீதம் 75 அடிப்படைப்புள்ளிகளால் 8.00 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. துணைநில் வீத வீச்சானது 125 அடிப்படைப் புள்ளிகளில் இருந்து 100 அடிப்படைப் புள்ளிகளிற்கு ஒடுக்கப்பட்டுள்ளது.

2019 பெப்புருவரி 22 - உரிமம் பெற்ற வர்த்தக வங்களின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீது பிரயோகிக்கப்படும் நியதி ஒதுக்கு விகிதமானது 2019 மாச்சு 01ல் ஆரம்பிக்கின்ற ஒதுக்கு பராமரிப்பு காலத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 6.00 சதவீதத்திலிருந்து 5.00 சதவீதத்திற்கு 1.00 சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்டுள்ளது

### நிதியியல் துறை

#### உரிமம் பெற்ற வங்கிகள்

2018 சனவரி 08 - 2018 வரவுசெலவுத் திட்டத்தின்கீழ், பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு, 2018 சனவரி 01ஆம் திகதி தொடக்கம் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக, உரிமம்பெற்ற வங்கிகள் நாணயக் கடித வசதிகளை வழங்குவதிலிருந்தும் விலகியிருக்குமாறு கோரும் நிதி மற்றும் வெகுசனஊடக அமைச்சின் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் தீர்மானத்தினை அறிவிக்கின்ற 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சுற்றறிக்கையொன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்டது.

2018 சனவரி 09 - இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் தொடர்பான 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்குவிதிகள் 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்ட ஒழுங்குவிதிகளை வெளியிட்டதன் மூலம் திருத்தம் செய்யப்பட்டது.

2018 பெப்புருவரி 08 - 2018 சனவரி 01 இலிருந்து, முதன் முதலில் பதிவுசெய்யப்பட்ட பிறகு இலங்கையில் ஒரு ஆண்டிற்கு மேலாக இல்லாவிடில் குறைவாக பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் மற்றும் இலத்திரனியல், கலப்பு மற்றும் ஏனைய பதிவுசெய்யப்படாத ஊர்திகள் தொடர்பிலான கடன் வசதிகளுக்கு பிரயோகிக்கத்தக்க கடன் பெறுமதி விகிதத்தினைக் குறிப்பிடுகின்ற அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளுக்குமான 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை விடுக்கப்பட்டது

2018 மாச்சு 14 - 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வதிவற்ற இலங்கையினரால் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவொன்றில் பேணப்படும் கணக்கொன்றினை ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில், கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் அனுமதிக்கின்ற விதத்தில் 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்திட்டம்) வங்கித்தொழில் சட்ட கட்டளையொன்று விடுக்கப்பட்டது.

2018 மே 24 - உரிமம்பெற்ற வங்கிகளின் முகவர்களை நியமிப்பது தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை அறிவிக்கின்றவிதத்தில் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் முகவர்களை நியமிப்பது தொடர்பில் 2018இன் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை விடுக்கப்பட்டது.

1 இது 2018 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டதும் அதேபோன்று 2018இன் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை வெளியிடப்படும் வரையில் 2019 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டதும் முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்களையும் வழிமுறைகளையும் அத்துடன் அண்மைய எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் கொள்கை வழிமுறைகளையும் உள்ளடக்குகிறது.

| | | |
|---|---|---|
| 2018 யூன் 05 | - | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட நிதி குத்தகைக்குவிடல் முறைமையின் கீழ், அரச முகவர்களுக்கான ஊர்திகளின் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளின் பெறுமதிக்கான கடன் விகிதத்தின் ஏற்புடைத்தன்மையினை அகற்றுவதற்காக 2018 பெப்புருவரி 08ஆம் நாளன்று விடுக்கப்பட்ட பணிப்புரைகளைத் திருத்தும் வகையில் அத்தகைய கொடுகடன் வசதிகளை வழங்குவது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகளையும் போதுமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் உரிமம்பெற்ற வங்கிகளை கேட்டுக்கொள்கின்ற விதத்தில் உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்காக பெறுமதிக்காக கடன் விகிதம் தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. |
| 2018 ஓகத்து 21 | - | பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களுக்கான இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன், நிதியியல் பெறுதிகள் தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கித்தொழில்சட்ட பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்டன. இதன்படி, நிதியியல் பெறுதி கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற போது, வங்கிகள், பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களை ஆரம்பித்தல், சபையின் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், வாடிக்கையாளர் விழிப்புணர்வு, தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அறிக்கையிடும் தேவைப்பாடுகள் போன்ற துறைகளை உள்ளடக்குகின்ற விதத்தில் மிகக் கடுமையான இடர்நேர்வு முகாமைத்துவ வழிமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. இது தொடர்பாக முன்னர் விடுக்கப்பட்ட பணிப்புரை இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. |
| 2018 ஓகத்து 23 | - | அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உத்தேசச் சலுகை குத்தகை வசதியின்கீழ் அரச பணிகளிலுள்ள கள அலுவலர்களும் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றும் ஆசிரியர்களும் உந்து ஈருருளிகளை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதத்தின் ஏற்புடைத்தன்மையினை அகற்றுவதற்காக, 2018ஆம் ஆண்டின் பெப்புருவரி 08ஆம் நாள் விடுக்கப்பட்ட 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளைத் திருத்துவதற்கும் அத்தகைய கொடுகடன் வசதிகளை வழங்குகையில் உள்ளக வரையறைகளை பேணுவதற்கும் போதுமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை பேணுமாறு கேட்டுக்கொள்வதற்குமாக உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிப்படியான கடன் விகிதம் மீது 2018ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. |
| 2018 செத்தெம்பர் 19 | - | உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் சில வகை உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக திறக்கப்படும் நாணயக் கடிதத்திற்கெதிராக ஆகக் குறைந்தது 100 சதவீத காசு எல்லைத் தேவைப்பாட்டினைப் பேண வேண்டுமெனப் பணிக்கப்பட்டது. |
| | - | மேற்குறிப்பிடப்பட்ட நாணயக் கடிதத்திற்கெதிராக ஆகக் குறைந்தது 100 சதவீத ஒதுக்குத் தேவைப்பாட்டினைப் பேண வேண்டுமெனப் பணிக்கப்பட்டது. |
| 2018 செத்தெம்பர் 28 | - | உந்து ஊர்திகள் தொடர்பில் கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தான பெறுமதிக் கடன் விகிதங்கள் தொடர்பான 2018ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 8ஆம் திகதி வெளியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையை திருத்தும் வகையில் 2018ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. அதற்கிணங்க மேற்குறிப்பிடப்பட்ட பணிப்புரையில் 2.1இல் குறிப்பிடப்பட்டவாறு கலப்பு உந்து ஊர்திகள், வான்கள், விளையாட்டுப் பாவனைக்கான உந்து ஊர்திகள் தொடர்பான பெறுமதிக் கடன் விகிதத்தைக் குறைக்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது. மறுஅறிவித்தல் வரை இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட சலுகை நியதிகளின் மீது உந்து ஊர்திகள் உரிமத்தினை வழங்கும் திட்டத்தின் கீழ் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்தினை திறப்பதனை தவிர்த்துக்கொள்ளுமாறு வங்கிகளுக்கு அறிவிக்கின்ற விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு, உந்து ஊர்திகளின் இறக்குமதியினை கட்டுப்படுத்துவதற்கும் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. |
| 2018 செத்தெம்பர் 29 | - | இறக்குமதி செய்யப்படும் உந்து ஊர்திகள் மற்றும் அத்தியவசியமற்ற நுகர்வுப்பொருட்கள் தொடர்பாகத் திறக்கப்படும் நாணயக் கடிதம் தொடர்பாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் முறையே ஆகக் குறைந்தது 200 சதவீதம் மற்றும் 100 சதவீதம் காசு எல்லைத் தேவைப்பாட்டினைக் கொண்டிருக்க வேண்டுமென பணிக்கப்பட்டது. |
| 2018 ஒத்தோபர் 1 | - | நாணயக் கடிதத்திற்கெதிராக பேணப்படும் எல்லைகளுக்கு ஆகக் குறைந்தது 100 சதவீத ஒதுக்குத் தேவைப்பாட்டினைக் கொண்டிருக்க வேண்டுமென்பது தொடர்பான நடவடிக்கைகள் 2018ஆம் ஆண்டு செத்தெம்பர் 29ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 2018 ஒத்தோபர் 11 | - | ஏற்பு நியதிகளுக்கெதிரான ஆவணத்தின் மீதான இறக்குமதிகளுக்கெதிராக அத்தியாவசியமல்லாத நுகர்வுப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு 100 சதவீத காசு அளவுத் தேவைப்பாட்டினை விதிப்பது பற்றி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| 2018 ஒத்தோபர் 12 | - | நாணயக் கடிதத்தினைத் திறப்பதன் மூலமும் ஏனைய முறைகளில் அமைந்த கொடுப்பனவுகள் மூலமும் உந்து ஊர்திகளையும் அத்தியாவசியமல்லாத நுகர்வுப்பொருட்களையும் இறக்குமதி செய்வதற்கு வசதிகளை வழங்குவதிலிருந்தும் விலகியிருக்குமாறு தேசிய சேமிப்பு வங்கிக்கு அறிவிக்கும் விதத்தில் 2018ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் தேசிய சேமிப்பு வங்கிக்கு விடுக்கப்பட்டன. |

| | | |
|---|---|---|
| 2018 ஒத்தோபர் 18 | - | 2019 மற்றும் 2020ஆம் கலண்டர் ஆண்டுகளுக்காக செலுத்தப்படவேண்டிய உரிமம்பெற்ற வங்கிகளுக்கான ஆண்டு உரிமக் கட்டணமானது முன்னைய ஆண்டின் இறுதியிலிருந்தவாறான உரிமம்பெற்ற வங்கிகளின் மொத்தச் சொத்துக்களின் அடிப்படையிலிருக்கும் என்பதனை அறிவிப்பதற்காக 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் விடுக்கப்பட்டது. |
| 2018 நவெம்பர் 21 | - | பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ், நிகர நிலையான நிதியிடல் விகிதம் தொடர்பில் முறையே 2019 சனவரி 01ஆம் நாள் மற்றும் 2019 யூலை 01ஆம் நாள் தொடக்கம் குறைந்தபட்சம் 90 சதவீதம் மற்றும் 100 சதவீதம் கொண்ட நிகர நிலையான நிதியிடல் விகிதங்களைப் பேணவேண்டுமென உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளை கோருகின்றவிதத்தில் 2018ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு விடுக்கப்பட்டன. |
| | - | பாசல் III திரவத்தன்மை நியமங்களின்கீழ், திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல் நியமங்களுக்கான திருத்தங்களை அறிவிக்கின்ற விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு 2018ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. |
| 2018 நவெம்பர் 26 | - | உந்து ஊர்திகள் மற்றும் முக்கியமல்லாப் பொருட்களின் இறக்குமதிக்காக வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாக நாணயக் கடிதங்களைத் திறக்கும் போது 100 சதவீதம் கொண்ட காசு எல்லைத் தேவைப்பாட்டினை விதிப்பதற்கான சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. மேலும், வங்கியுடன் பேணப்படுகின்ற எல்லை வைப்புக்களின் பயன்பாட்டுடன் வெளிநாட்டு நாணயங்களின் மூலம் இறக்குமதி உண்டியல்கள் ஈர்க்கப்படுவதுடன் நாணயக் கடிதங்களைத் திறக்கும் போது பட்டியலிடல் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது. |
| 2018 நவெம்பர் 30 | - | உரிமம்பெற்ற வங்கிகளின் முகவர்களை நியமிப்பது தொடர்பிலும் 2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் 06ஆம் பணிப்புரையைத் திருத்துவதற்கும் பதிலிடுவதற்குமாக 2018ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. |
| | - | 2018ஆம் ஆண்டு நவெம்பர் 30ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரவிருக்கும் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான புதிய நாணயக் கொள்கையொன்றினை அறிவிக்கும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு 2018ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. புதிய பணிப்புரைகள், உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான 2017ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளையும் முதன்மைக் கணக்காளரினால் விடுக்கபட்ட 1997 சனவரி 13ஆம் நாளிடப்பட்ட பீடி/எவ்எஸ்/196ஆம் இலக்க சுற்றறிக்கையும் இரத்துச்செய்கின்றது. |
| | - | உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, வதிவோருடன் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளை மேற்கொள்வது மற்றும் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளில் ஈடுபடுவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கின்ற விதத்தில் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் 2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் கட்டளை (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) விடுக்கப்பட்டது. |
| 2018 திசெம்பர் 28 | - | பாசல் III இன் கீழான முடுக்கி விகிதம் தொடர்பில் 2019 சனவரி 01ஆம் நாள் தொடக்கம் உரிமம்பெற்ற வங்கிகள் ஏற்புடைத்தானதாகவிருக்கக்கூடிய குறைந்தபட்சம் 3 சதவீதம் கொண்ட முடுக்கி விகிதத்தினைப் பேணவேண்டுமென உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளைக் கேட்டுக்கொள்கின்ற 2018ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. |
| | - | முடுக்கி விகிதத்தினைக் கணிக்கும்போது வெளிப்படுத்துகை அளவிலிருந்து வங்கியின் சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தின் 60 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தும் அரச பிணையங்களை நீக்குவதற்கு அனுமதிப்பதனை அறிவிக்கின்ற விதத்தில் தேசிய சேமிப்பு வங்கிக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| 2018 திசெம்பர் 31 | - | இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இனை பின்பற்றுவது தொடர்பில் தொடர்ச்சியானதும் முன்மதியுடையதுமான நடைமுறைகளை நிறுவுகின்ற நோக்குடன், இலங்கை கணக்கீட்டு நியமம் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்களினை பின்பற்றுவது மீதான வழிகாட்டல்கள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| 2019 சனவரி 04 | - | இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளில் பணியாற்றும் வெளிநாட்டு அலுவலர்களின் தொழில்நிலை மீதான வழிகாட்டல்களையும் இது தொடர்பில் முன்னர் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை இரத்துச்செய்யப்படுவது பற்றியும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| 2019 சனவரி 18 | - | புதிய கணக்கீட்டு நியமங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் ஏற்கனவேயுள்ள படிவங்களுக்குப் பதிலாக புதிய நிதியியல் கூற்றுக்களின் படிவங்களைக் கொண்ட தொகுதியொன்றினை குறித்துரைக்கின்ற விதத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வருடாந்த மற்றும் காலாண்டு நிதியியல் கூற்றுக்களின் வெளியீடுகளையும் ஏனைய வெளிப்படுத்தல்களையும் கொண்ட வெளியீடுகள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கபட்டது. |

இனிவர இருப்பவை - புதிய வங்கித்தொழில் சட்டமொன்றினை வரைவது.

- வங்கி உறுதிப்பாட்டுத்தன்மை தரமிடல் சுட்டெண் ஒன்றினை நடைமுறைக்கிடுவது.
- கம்பனி ஆளுகையின் கீழ் பொருத்தம் மற்றும் தகுதி பற்றிய மதிப்பீட்டுப் பிரமாணங்களை வலுப்படுத்தல்.
- உரிமம்பெற்ற வங்கிகளுக்காக புதிய பங்கு சொத்துடமைக் கொள்கையொன்றினை நடைமுறைக்கிடல்.
- உரிமம் பெற்ற வங்கிகளுக்கான அறவிடல் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.
- தகைமைபெற்ற கணக்காய்வாளர்கள் பட்டியலைத் திருத்துதல்.
- உள்நாட்டு முறையியல் சார்ந்த முக்கிய வங்கிகளை அடையாளம் காண்பதற்கான கட்டமைப்பொன்றினை அபிவிருத்தி செய்தல்.
- பாரிய வெளிநாட்டு வங்கிகளின் உதவுதொகைமயப்படுத்தலை வழங்குவதற்கான கட்டமைப்பொன்றினை உருவாக்குதல்.
- ஒன்றுகுவிந்த மேற்பார்வைக்கான கட்டமைப்பொன்றினை உருவாக்குதல்.
- சைபர் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தல் வங்கித்தொழில் தொழிற்பாடுகளுக்கான கொள்கைக் கட்டமைப்பொன்றினை நிறுவுதல்.
- உறுதித்தன்மைவாய்நத நிதியினை நோக்கிய வங்கித்தொழில் துறை முன்னெடுப்புகளுக்கு வசதியளித்தல்

**உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்**

2018 சனவரி 16 - நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு மீதான 2018ஆம் ஆண்டு 1ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரை விடுக்கப்பட்டது. அதே பணிப்புரை சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு 2018 சனவரி 22 விடுக்கப்பட்டது.

2018 மாச்சு 05 - 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் சென்றல் இன்வெஸ்ட்மென்ற் அன்ட் பினான்ஸ் பிஎல்சி இற்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்துச் செய்யப்படுவதுடன் ஒடுக்கிவிடும் செயன்முறையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

2018 மாச்சு 13 - அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன் தரமிடல் முகவர் ஒருவரிடமிருந்து கொடுகடன் தரமிடலொன்றினை பெற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதுடன் அத்தகைய தரமிடலை 2018 ஒத்தோபர் 1ஆம் திகதியிலிருந்து பிரசுரிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டன.

2018 யூன் 06 - இடர்நேர்வு முகாமைத்துவம் மீது வலுவான வலியுறுத்தல்களை மேற்கொள்ளும் பொருட்டும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் தற்போதைய இடர்நேர்வு மதிப்பீட்டு இயலாற்றல்களை மேம்படுத்துவதனை ஊக்குவிக்கும் பொருட்டும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்குமான புதிய மூலதனப் போதுமைக் கட்டமைப்பொன்று நடைமுறைக்கிடப்பட்டது.

- அசையாச் சொத்துக்கள் தொடர்பில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மதிப்பீட்டு நடைமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

2018 யூலை 25 - 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் ஸ்ரான்டட் கிறேடிட் பினான்ஸ் லிமிடெட் இற்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்துச் செய்யப்பட்டதுடன் ஒடுக்கிவிடும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

2018 செத்தெம்பர் 04 - உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் வெளியிலிருந்து பணிகளை பெற்றுக்கொள்ளும் ஒழுங்குகளை நியமப்படுத்துவதற்கும் வெளியிலிருந்து வியாபாரத் தொழிற்பாடுகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் புதிய பணிப்புரையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

2018 ஒத்தோபர் 01 - இறக்குமதிகளையும் அதன் விளைவாக செலாவணி வீதத்தின் மீது ஏற்படக்கூடிய மோசமான தாக்கங்களையும் கட்டுப்படுத்துவதற்காக பெறுமதிக்கான கடன் விகிதம் மேலும் திருத்தப்பட்டதுடன் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் 2018 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் புதிய விகிதமொன்றினைப் பின்பற்ற வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டன. இப்பணிப்புரையானது முதலில் 2018 பெப்புருவரி 8ஆம் நாளன்று விடுக்கப்பட்டதுடன் 2018 ஒத்தோபர் 01ஆம் நாளன்று இது திருத்தப்படுவதற்கு முன்னதாக 2018 யூன் 07ஆம் நாளன்றும் 2018 ஓகத்து 24ஆம் நாளன்றும் திருத்தியமைக்கப்பட்டன. பணிப்புரையின்படி பெறுமதிக்கான கடன் விகிதம் கலப்பு உந்து ஊர்திகள், வான்கள் மற்றும் கடுவழிப் பயண ஊர்திகள் என்பனவற்றின் பெறுமதிப்படியான கடன் விகிதம் 50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

2018 திசெம்பர் 03 கடன்கள் மீது மிகப்பெரும் வட்டி வீதங்கள் விதிக்கப்படுவதிலிருந்தும் வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம் தொடர்பாக புதிய பணிப்புரையொன்று உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| இனிவரவிருப்பவை | - | சொத்துரிமை மீதான வரையறை, திரவத்தன்மை முகாமைத்துவம், கம்பனி ஆளுகை மற்றும் தேவைப்பாடுகளை ஏற்பாடு செய்தல் என்பவற்றின் மீது பணிப்புரைகளை விடுக்கப்படவுள்ளன. |
| | - | உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் முன்மொழியப்பட்ட தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் கட்டமைப்புடன் இணைந்து செல்லும் விதத்தில் முறிவடைந்த நிதிக் கம்பனியொன்றின் கோரல்களின் முன்னுரிமை மீதான ஒழுங்குவிதிகள் விடுக்கப்படவுள்ளன. |

**காப்புறுதி**

| | | |
|---|---|---|
| 2018 சனவரி 09 | - | நிதி சார்ந்த சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள் இல்லாவிடில் மோசடியின் அடிப்படையில் பணியிலிருந்து நிறுத்தப்பட்ட ஊழியர்களை பணியில் அமர்த்துவதை தவிர்ப்பதற்கான பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 2018 பெப்புருவரி 16 | - | அனைத்து நீண்டகால காப்புறுதி கம்பனிகளுக்கும், காப்புறுதி நிதி முகாமைத்துவம் தொடர்பான வழிமுறைகள் இலங்கை காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்டது. |
| 2018 மாச்சு 20 | - | ஒரே தடவையிலான மிகையின் இனங்காணல் மற்றும் முறைப்படுத்தல் தொடர்பில் இலங்கை காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவினால் பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 2018 மே 01 | - | காப்புறுதி தரகர்களின் பதிவுக்கட்டணம் அதிகரிக்கப்பட்டது. |
| 2018 மே 24 | - | உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளிடமிருந்து முன்னோடிகளை பெறுகின்ற காப்பீட்டாளர்கள் மற்றும் தரகர்களுக்கான வழிகாட்டல்களை இலங்கை காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழு வழங்கியது. |
| 2019 சனவரி 01 | - | காப்புறுதிக் கம்பனிகளுக்கான கம்பனி ஆளுகை மீதான பணிப்புரையொன்று இலங்கை காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | - | உலக வங்கியிலிருந்து தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நிதியியல் துறையினை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்துடன் தொடர்பான சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் சீர்திருத்தங்களை நடாத்துதல். |

**மூலதனச் சந்தை**

| | | |
|---|---|---|
| 2018 சனவரி | - | அனைத்துப் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான ஆகக் குறைந்த அரச உடமை தேவைப்பாட்டின் மீதான கட்டளைகளைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. |
| 2018 யூன் | - | 2017 நவெம்பரில் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பிணையங்கள் பரிவர்த்தனை உண்டியல்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பதில்களையும் பங்குடமையாளர் கருத்துக்களையும் மீளாய்வு செய்வதற்காக குறுக்குப் பிரிவுக் குழுமமொன்று பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் நிறுவப்பட்டது. |
| 2018 யூலை | - | கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையினூடாக மூலதனத்தை உயர்த்துவதற்காக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை வசதிப்படுத்துவதற்காக பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி சபை உருவாக்கப்பட்டது. |
| 2018 ஓகத்து | - | அனைத்து உரிமம் பெற்ற/ பதிவுசெய்யப்பட்ட முயற்சிகளுக்கும் பொருத்தம் மற்றும் தகுதி வாய்ந்த வழிகாட்டல்கள் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் வழங்கப்பட்டது. |
| 2018 செத்தெம்பர் | - | பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலினை ஒழித்தலை நோக்கிய இடர்நேர்வுகளை அடிப்படையாகக் கொண்ட வினைத்திறனான மேற்பார்வையினை அதிகரிப்பதற்காக பங்குத்தரகு நிறுவனங்களுக்கு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் கணிப்பீட்டு கட்டமைப்பொன்று விருத்தி செய்யப்பட்டது. |
| 2018 திசெம்பர் | - | படுகடன் பிணையங்களை முதலீடு செய்கின்ற/ பட்டியற்படுத்தப்பட்ட பங்குரிமைகளை விற்பனை செய்கின் கூறு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகளுக்கான கட்டமைப்பொன்று பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | - | பல் நாணயச் சபையொன்றினை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளுக்குப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. |
| இனிவரவிருப்பவை | - | விசேடமாக பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் தலைவரின் இரட்டைத்தன்மை மீதான கம்பனி ஆளுகைக் கட்டமைப்பினை மேம்படுத்துதல். |
| | - | கம்பனி ஆளுகை மற்றும் நெருக்கமான வர்த்தகம் மீதான கட்டளைகள் பட்டியற்படுத்தப்பட்டன. |
| | - | அதிகாரசபை மீதான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களினால் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்களுக்கான கொள்கையொன்றினை முன்மொழிதல். |

**சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி**

| | | |
|---|---|---|
| 2018 சனவரி 04 | - | இலங்கையின் தேசிய நிதியியல் உள்ளடக்க தந்திரோபாயத்தினை அபிவிருத்தி செய்வதற்கு சர்வதேச நிதிக் கூட்டமைப்புடன் ஒரு கூட்டு ஒப்பந்தமொன்றினைக் கைச்சாத்திட்டது. |

| | | |
|---|---|---|
| 2018 மாச்சு 12 | - | இலங்கை அரசாங்கமானது வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்துடன் சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு நிர்வாக ஒப்பந்தத்தினை கைச்சாத்திட்டது. |
| 2018 ஏப்பிறல் 10 | - | சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய ஆறு வகையிலான கடன் திட்டங்கள் பற்றிய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது |
| 2018 யூலை 15 | - | வறுமை ஒழிப்பு நுண்நிதியியல் செயற்றிட்டம் - II - சுழலும் நிதியம் நிறைவு செய்யப்பட்டது. |
| 2018 செத்தெம்பர் 07 | - | சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்துடன் நிர்வாக ஒப்பந்தத்தின் பின்னிணைப்பு கைச்சாத்திடப்பட்டது. |
| 2018 ஒத்தோபர் 31 | - | சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் திட்டங்களுடன் ஆரம்பிக்கும் வகையில் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கடன் திட்டங்களுக்கான தானியக்க செய்முறைகளை கொண்டதான ஒரு செயன்முறையினை அபிவிருத்தி செய்வதற்கு சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ அலகுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. |
| 2018 திசெம்பர் 05 | - | பருவகால கடன்களுக்கான உயர்ந்தபட்ச மீளச்செலுத்துகைக் காலம் மற்றும் சலுகைக்காலம் என்பனவற்றை அதிகரிப்பதற்கான திருத்தம் செய்யப்பட்ட சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் திட்டங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது. |

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

| | | |
|---|---|---|
| 2018 சனவரி 18 | - | வணிகர்களுக்கான உரிய கால கொடுப்பனவுகளை உறுதிசெய்வதற்கும் அட்டை உரிமையாளர்களின் நலன்களின் பாதுகாப்பதற்கும் சேவை வழங்குனர்களினூடான கொடுப்பனவு அட்டைகளின் அடிப்படையிலான கொடுக்கல்வாங்கல்களை கையேற்றல் மீதான நிபந்தனைகளை விதந்துரைப்பதற்காக பணி வழங்குனர்களினூடாக கொடுப்பனவு அட்டைகளின் அடிப்படையிலான இலத்திரனியல் வணிக கொடுக்கல்வாங்கல்களின் கையேற்றல் மீதான பணிப்புரை வெளியிடப்பட்டது. |
| | - | கொடுப்பனவுப் பணிகள் வழங்குவதற்காக நிதியியல் நிறுவனங்களினால் கையடக்கத் தொலைபேசி செயலிகள் குறைந்தபட்ச இணக்க நியமங்களை நிர்ணயிப்பதற்கு கொடுப்பனவுப் பணிகள் தொடர்பிலான கையடக்கத் தொலைபேசி செயலிகளுக்கு குறைந்தபட்ச இணக்க நியமங்கள் தொடர்பான வழிகாட்டல். |
| 2018 யூலை 25 | - | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளித் தொழிற்பாடுகள் மீது 2014இன் 02ஆம் இலக்க பொதுப் பணிப்புரைக்கு பதிலாக 2018இன் 01ஆம் இலக்க பொதுப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டது. |
| 2018 ஓகத்து 24 | - | வழங்குபவரும் கையேற்பவரும் வங்கியல்லாத விற்பனை மைய கொடுக்கல்வாங்கல்களின் ஆளிப்படுத்தலையும் தீர்ப்பனவினையும் வசதிப்படுத்துவதற்கு அதன் உறுப்பினர்களின் விற்பனை மைய ஆளிகளை இணைப்பதற்கு லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படுகின்ற பொதுவான விற்பனை மைய ஆளியின் தொழிற்பாடுகள் மீது 2018இன் 02ஆம் இலக்க பொதுப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டது. |
| 2018 ஒத்தோபர் 09 | - | 2018இன் 6ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கையானது உள்நாட்டு நாணயக் கொடுப்பனவுகளுக்காக தேசிய உடனடி பதிலிறுத்தல் குறியீட்டு தரநியமத்தினை நிறுவுவதற்கும் ஊக்குவிப்பதற்கும் வழங்கப்பட்டது. |
| 2018 ஒத்தோபர் 22 | - | லங்கா பே பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி மற்றும் லங்கா பே பொதுவான இலத்திரனியல் நிதி மாற்றல் ஆளி என்பவற்றில் பொறுப்பு முகாமைத்துவ வரையறைகளைக் குறித்துரைப்பதற்கு 2018இன் 7ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | - | அத்தகைய கொடுப்பனவு இயந்திரங்களூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களுக்காக அதேநேர அறிவித்தல்களை வழங்குவதற்கு இலத்திரனியல் கொடுப்பனவு கருவிகளூடான கொடுப்பனவுகளை வசதிப்படுத்துகின்ற நிதியியல் நிறுவனங்களை அறிவுறுத்தி சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டுள்ளது. |

**சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் படிவங்கள்**

| | | |
|---|---|---|
| 2018 சனவரி 10 | - | 2018ஆம் ஆண்டு 1ஆம் இலக்க பெயர் குறிக்கப்பட்ட நிதிசாரா தொழில் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவன) விதிகளுக்கேற்ப பெயர் குறிக்கப்பட்ட நிதிசாரா தொழிகளுக்கு “இடர் அடிப்படையிலான அணுகுமுறை” ஒன்றை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியான வாடிக்கையாளர் விழிப்புக் கவனத்தை மேற்கொள்வதற்கு விசேட வர்த்தமானி இல.2053/20 வெளியிடப்பட்டது. |
| 2018 சனவரி 11 | - | நிதியியல் நிறுவனங்களுக்கான பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு முகாமைத்துவம் மீது 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2018 ஏப்பிறல் 18 | - | கசினோக்கள் மற்றும் சூதாட்ட விடுதிகளுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலின் ஒழித்தல் மீது 2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வழிகாட்டல் விடுவிக்கப்பட்டது. |
| | - | உண்மைச் சொத்துக்கள், மதிப்புள்ள உலோகங்கள், மதிப்புள்ள மற்றும் பகுதியளவில் இரத்தினக்கற்களுக்கான தரகர்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலின் ஒழித்தல் மீது 2018ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வழிகாட்டல் விடுவிக்கப்பட்டது. |
| 2018 ஏப்பிறல் 19 | - | நிதியியல் நிறுவனங்களுக்கான பயன்பெறு சொத்துரிமையை அடையாளங் காண்பது மீது 2018இன் 04ஆம் இலக்க வழிகாட்டல் விடுவிக்கப்பட்டது. |
| 2019 ஏப்பிறல் 26 | - | 2015இற்கான பரஸ்பர மதிப்பீடு அறிக்கையில் இனங்காணப்பட்ட இடைவெளிகளைத் திருத்தம் செய்யும் பொருட்டு, பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலின் ஒழித்தலின் மேற்பார்வையிடும் செயற்பாட்டினை வலுப்படுத்துவதற்காக, இடர் அடிப்படையிலான தளத்திலான மேற்பார்வையினை மேற்கொள்வதற்கான செயன்முறை தொடர்பான 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை விடுவிக்கப்பட்டது. |
| 2018 மே 18 | - | 2006இன் 06ஆம் இலக்க நிதியிடல் பரிவர்த்தனைகள் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட நிதியியல் வர்த்தக முயற்சிகள் மற்றும் பெயரிடப்பட்ட நிதியல்லா வர்த்தக முயற்சிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு 2017ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்தல் (கொரிய சனநாயக மக்கள் குடியரசு தொடர்பான தடைகள்) மீதான 2018ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வழிகாட்டல் விடுவிக்கப்பட்டது. |
| 2018 யூலை 17 | - | நிதியியல் நிறுவனங்கள் மற்றும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வர்த்தகமுயற்சிகளுக்கான 2018 யூலை 17 என திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இல.2080/34 இன் கீழ் 2018இன் 01ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் (ஈரானுடன் தொடர்பான தடைகள்) வழிகாட்டலை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டது. |
| 2018 ஓகத்து 06 | - | நிதியியல் நிறுவனங்களுக்கான சந்தேகத்திற்கிடமான நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் அறிக்கையிடல் மீது 2018இன் 06ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது. |
| 2018 செத்தெம்பர் 07 | - | பயன்பெறு சொத்துடமை தகவலின் பயன்பாடு மீது சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு வழிகாட்டல் குறிப்பு வெளியிடப்பட்டது. |
| 2018 செத்தெம்பர் 10 | - | நிதியியல் நிறுவனங்கள் மற்றும் பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லா வர்த்தக முயற்சிகளுக்கான 2018இன் 01ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் (ஈரானுடன் தொடர்பான தடைகள்) வழிகாட்டலை நடைமுறைப்படுத்தல் மீதான 2018ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வழிகாட்டல் வெளியிடப்பட்டது. |
| 2018 ஒத்தோபர் 08 | - | 2016இன் 1ஆம் இலக்க வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தினைத் திருத்துவதற்கான 2092/02ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி நிதி நிறுவனங்களுக்கு வெளியிடப்பட்டது. |

**வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| 2018 மே 02 | - | உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் மீது பிரயோகிக்கப்படுகின்ற தேறிய ஆரம்ப நிலைமை வரையறை திருத்தப்பட்டது. |
| 2018 செத்தெம்பர் 29 | - | ஒரு ஆண்டு காலத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஊர்திகள் அனுமதிப் பத்திரங்களின் வழங்கலின் மீதான இடைநிறுத்தம் அறிவிக்கப்பட்டது. |
| | - | அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச்சபைகள் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் ஆகியவற்றிற்கான ஊர்திகளின் இறக்குமதிகள் மேலும் அறிவித்தல் வரும் வரை இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டது. |
| | - | அரச துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகை ரீதியிலான அனுமதிகளை பயன்படுத்தி ஊர்திகளை இறக்குமதி செய்வதன் மீது ஆறு மாத காலப்பகுதிக்கு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டது. |
| 2018 ஒத்தோபர் 05 | - | உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் மீது பிரயோகிக்கப்படுகின்ற தேறிய ஆரம்ப நிலைமை வரையறை திருத்தப்பட்டது. |
| 2018 ஒத்தோபர் 10 | - | மறுஅறிவித்தல் வழங்கப்படும் வரை முற்கொடுப்பனவு முறைமையின் கீழ் குறிப்பிடப்பட்ட அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக இலங்கை ரூபாவின் பரிமாற்றத்துடன் தொடர்புபடுகின்ற பொருட்களின் இறக்குமதியாளர்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிப்பதிலிருந்து அவர்களை மட்டுப்படுத்தல் தொடர்பிலான பணிப்புரைகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்டது. |
| 2018 திசெம்பர் 21 | - | வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் மூலமான முதலீடுகளுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களினை மேலும் வசதிப்படுத்தல் தொடர்பிலான பணிப்புரைகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்டது. |

## விலைத் திருத்தங்கள்

2018 ஏப்பிறல் 28 - திரவப் பெற்றோலிய வாயுவின் 12.5 கி.கிறாம் உருளையொன்றின் விலை ரூ.245 இனால் ரூ.1,676 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2018 மே 11 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டன:
- பெற்றோல் (92 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.20 இனால் ரூ.137 இற்கு
- பெற்றோல் (95 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.20 இனால் ரூ.148 இற்கு
- தன்னியக்க டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.14 இனால் ரூ.109 இற்கு
- சிறப்பு டீசல் லீற்றரொன்றிற்கு ரூ. 9 இனால் ரூ.119 இற்கு
- மண்ணெண்ணெய் லீற்றரொன்றிற்கு ரூ. 57 இனால் ரூ.101 இற்கு

2018 மே 23 - பயணிகள் பேரூந்துக் கட்டணங்கள் 12.5 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. ஆகக் குறைந்த பேரூந்துக் கட்டணம் ரூ.10 இலிருந்து ரூ.12 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2018 யூன் 13 - மண்ணெண்ணெயின் சில்லறை விலை லீற்றரொன்றிற்கு ரூ.31 இனால் ரூ.70 இற்குக் குறைக்கப்பட்டது.

2018 யூன் 30 - திரவப் பெற்றோலிய வாயுவின் 12.5 கி.கிறாம் உருளையொன்றின் விலை ரூ.138 இனால் ரூ.1,538 இற்குக் குறைக்கப்பட்டது.

2018 யூலை 11 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டன:
- பெற்றோல் (92 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.8 இனால் ரூ.145 இற்கு
- பெற்றோல் (95 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.7 இனால் ரூ.155 இற்கு
- தன்னியக்க டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.9 இனால் ரூ.118 இற்கு
- சிறப்பு டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.10 இனால் ரூ.129 இற்கு

2018 ஓகத்து 11 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டன:
- பெற்றோல் (95 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.2 இனால் ரூ.157 இற்கு
- சிறப்பு டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.1 இனால் ரூ.130 இற்கு

2018 செத்தெம்பர் 11 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டன:
- பெற்றோல் (92 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.4 இனால் ரூ.149 இற்கு
- பெற்றோல் (95 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.4 இனால் ரூ.161 இற்கு
- தன்னியக்க டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.5 இனால் ரூ.123 இற்கு
- சிறப்பு டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.3 இனால் ரூ.133 இற்கு

2018 செத்தெம்பர் 21 - பயணிகள் பேரூந்துக் கட்டணங்கள் 4 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன.

2018 செத்தெம்பர் 27 - திரவப் பெற்றோலிய வாயுவின் 12.5 கி.கிறாம் உருளையொன்றின் விலை ரூ.195 இனால் ரூ.1,733 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2018 ஒத்தோபர் 01 - புகையிரதக் கட்டணங்கள் 15 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன.

2018 ஒத்தோபர் 11 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டன:
- பெற்றோல் (92 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.6 இனால் ரூ.155 இற்கு
- பெற்றோல் (95 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.8 இனால் ரூ.169 இற்கு
- சிறப்பு டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.8 இனால் ரூ.141 இற்கு

2018 ஒத்தோபர் 12 - வெள்ளைச் சீனி மீதான ஆகக்கூடிய சில்லறை விலை பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டது:
- வெள்ளைச் சீனி (பொதி செய்யப்படாதது) கி.கிறாமொன்றிற்கு ரூ.100
- வெள்ளைச் சீனி (பொதி செய்யப்பட்டது) கி.கிறாமொன்றிற்கு ரூ.105

2018 நவெம்பர் 02 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு குறைக்கப்பட்டன:
- பெற்றோல் (92 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.10 இனால் ரூ.145 இற்கு
- தன்னியக்க டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.7 இனால் ரூ.116 இற்கு

2018 நவெம்பர் 09 - பயணிகள் பேரூந்துக் கட்டணங்கள் 2 சதவீதத்தினால் குறைக்கப்பட்டன.

2018 நவெம்பர் 16 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு குறைக்கப்பட்டன:
- பெற்றோல் (92 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.5 இனால் ரூ.140 இற்கு
- பெற்றோல் (95 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.5 இனால் ரூ.164 இற்கு
- தன்னியக்க டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.5 இனால் ரூ.111 இற்கு
- சிறப்பு டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.5 இனால் ரூ.136 இற்கு

2018 திசெம்பர் 01 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு குறைக்கப்பட்டன:
- பெற்றோல் (92 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.5 இனால் ரூ.135 இற்கு
- பெற்றோல் (95 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.5 இனால் ரூ.159 இற்கு

- தன்னியக்க டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.5 இனால் ரூ.106 இற்கு
- சிறப்பு டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.5 இனால் ரூ.131 இற்கு

2018 திசெம்பர் 22 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு குறைக்கப்பட்டன:
- பெற்றோல் (92 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.10 இனால் ரூ.125 இற்கு
- பெற்றோல் (95 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.10 இனால் ரூ.149 இற்கு
- தன்னியக்க டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.5 இனால் ரூ.101 இற்கு
- சிறப்பு டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.10 இனால் ரூ.121 இற்கு

2018 திசெம்பர் 27 - பயணிகள் பேரூந்துக் கட்டணங்கள் 4.2 சதவீதத்தினால் குறைக்கப்பட்டன.

2019 சனவரி 11 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு குறைக்கப்பட்டன:
- பெற்றோல் (92 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.2 இனால் ரூ.123 இற்கு
- பெற்றோல் (95 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.2 இனால் ரூ.147 இற்கு
- தன்னியக்க டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.2 இனால் ரூ.99 இற்கு
- சிறப்பு டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.3 இனால் ரூ.118 இற்கு

2019 பெப்புருவரி 12 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டன:
- பெற்றோல் (92 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.6 இனால் ரூ.129 இற்கு
- பெற்றோல் (95 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.5 இனால் ரூ.152 இற்கு
- தன்னியக்க டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.4 இனால் ரூ.103 இற்கு
- சிறப்பு டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.8 இனால் ரூ.126 இற்கு

2019 மாச்சு 13 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டன:
- பெற்றோல் (92 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.3 இனால் ரூ.132 இற்கு
- பெற்றோல் (95 ஒக்டேன்) லீற்றரொன்றிற்கு ரூ.7 இனால் ரூ.159 இற்கு
- தன்னியக்க டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.1 இனால் ரூ.104 இற்கு
- சிறப்பு டீசல் லீற்றரொன்றிற்கு ரூ.8 இனால் ரூ.134 இற்கு

## வரித் திருத்தங்கள்

### தனியாள் வருமான வரி

2018 ஏப்பிறல் 1 - 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்திற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு:
- தனியாள் வருமானத்திற்கான தனியாள் மீதான விலக்களிப்பு ஆண்டொன்றிற்கு ரூ.500,000 ஆகக் காணப்பட்டது.
- வதியும் தனியார்களுக்கான தொழில்நிலை வருமானம் மீதான விலக்களிப்பு ஆண்டொன்றிற்கு ரூ.750,000இலிருந்து ரூ.1.2 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது (இவ் 1.2 மில்லியனானது தனியாள் மீதான விலக்களிப்பு ரூ.500,000 இனையும் தொழில்நிலை வருமானம் மீதான விலக்களிப்பு ரூ.700,000 இனையும் உள்ளடக்கியுள்ளது).
- வருமான வரி அடுக்குகள் ரூ.500,000 இலிருந்து ரூ.600,000 இற்கு அகலப்படுத்தப்பட்டதுடன் முன்னேற்ற வரி வீதக் கட்டமைப்பு பின்வருமாறு திருத்தப்பட்டது:

| வரி விதிக்கத்தக்க வருமானம் (ஆண்டிற்கு) | | | |
|---|---|---|---|
| முன்னைய சட்டம் | வரி வீதம் | நடைமுறைச் சட்டம் | வரி வீதம் |
| முதலாவது ரூ.500,000 | 4% | முதலாவது ரூ.600,000 | 4% |
| ரூ.500,001 - ரூ.1,000,000 | 8% | ரூ.600,001 - ரூ.1,200,000 | 8% |
| ரூ.1,000,001 - ரூ.1,500,000 | 12% | ரூ.1,200,001 - ரூ.1,800,000 | 12% |
| ரூ.1,500,000 இனை விஞ்சியவற்றிற்கு | 16% | ரூ.1,800,001 - ரூ.2,400,000 | 16% |
| | | ரூ.2,400,001 - ரூ.3,000,000 | 20% |
| | | ரூ.3,000,000 இனை விஞ்சியவற்றிற்கு | 24% |

- மூலதன இலாப வரியினை 10 சதவீதமான வீதமொன்றில் அறிமுகப்படுத்தப்பட்டது.

### கம்பனி வருமான வரி

2018 ஏப்பிறல் 01 - 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்திற்கிணங்க கம்பனி வருமான வரி வீதங்கள் பின்வருமாறு 3 அடுக்கு அமைப்பிற்குத் திருத்தப்பட்டுள்ளன:

(அ) சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள், பொருட்கள் அல்லது பணிகளின் ஏற்றுமதிகள், வேளாண்மை தொழில்முயற்சிகள், கல்விப் பணிகள், சுற்றுலாத்துறையின் மேம்பாடுகள், தகவல் தொழில்நுட்பப் பணிகள், தொண்டு நிறுவனங்கள், ஊழியர் சேம நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதிகள் என்பனவற்றிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானங்கள் மீது 14 சதவீதம் கொண்ட குறைந்த வீதமொன்று பிரயோகிக்கப்படும்.

(ஆ) வங்கித்தொழில் மற்றும் நிதி, காப்புறுதி, குத்தகைக்குவிடல் மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள் என்பன உள்ளடங்கலாக ஏனைய அனைத்துத் துறைகளினதும் இலாபங்கள் மற்றும் வருமானங்கள் மீது 28 சதவீதம் கொண்ட நியம வீதமொன்று பிரயோகிக்கப்படும்.

(இ) பந்தயம் மற்றும் சூதாட்டம், குடிவகை மற்றும் புகையிலை என்பனவற்றிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானங்கள் மீது 40 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதமொன்று பிரயோகிக்கப்படும்.

### பிடித்துவைத்தல் வரி

2018 ஏப்பிறல் 01 - 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்திற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு:

- வங்கி வைப்புக்களிலிருந்து தனிநபர்களால் பெறப்பட்ட வட்டி வருமானத்தின் மீதான பிடித்துவைத்தல் வரி 2.5 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.
- ரூ.1.5 மில்லியன் வரையிலான வங்கி வைப்புக்களிலிருந்து மூத்த பிரஜைகளால் பெறப்பட்ட வட்டி வருமானத்தின் மீதான பிடித்துவைத்தல் வரி விலக்களிக்கப்பட்டது.
- திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வட்டி வருமானத்தின் மீதான பிடித்துவைத்தல் வரி விலக்களிக்கப்பட்டது.
- மாதமொன்றிற்கு ரூ.50,000 இனை விஞ்சுகின்ற பணிக்கட்டணம் மற்றும் ஒப்பந்த கொடுப்பனவுகள் மீது பிடித்துவைத்தல் வரி விதிக்கப்பட்டது.

இனிவரவிருப்பவை - எந்தவொரு வதியும் தனிநபருக்கும் மாதமொன்றிற்கு ரூ.50,000 இனை விஞ்சாத உரிமை தொகை கொடுப்பனவு மீதான பிடித்து வைத்தல் வரியானது விலக்களிக்கப்படுவதுடன் இது ஒவ்வொரு ஆண்டு மதிப்பீட்டிற்கும் ரூ.500,000 இற்கு உட்படுத்தப்படும்.

- எந்தவொரு வதியும் தனிநபருக்கும் மாதமொன்றிற்கு ரூ.50,000 இற்கு மேற்படாத வாடகை கொடுப்பனவு மீதான பிடித்து வைத்தல் வரியானது விலக்களிக்கப்படுவதுடன் இது ஒவ்வொரு ஆண்டு மதிப்பீட்டிற்கும் ரூ.500,000 இற்கு உட்படுத்தப்படும்.

### பொருளாதாரப் பணிக் கட்டணம்

இனிவரவிருப்பவை - பொருட்கள் அல்லது பணிகளின் ஏற்றுமதியினால் ஏற்படும் வருமானத்தின் மீது பிரயோகிக்கக்கூடிய பொருளாதார பணிக் கட்டண வீதம் 0.50 சதவீதத்தில் இருந்து 0.25 சதவீதத்திற்கு குறைக்கப்படும்.

- நாட்டின் பொருளாதார நன்மையைக் கருத்தில் கொண்டு நிதி அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்டவாறு எந்தவொரு மூலதனப் பொருளையும் தவிர்ந்த ஏனைய பண்டம் அல்லது பொருளின் இறக்குமதி மீது 0.50 சதவீத பொருளாதாரப் பணிக் கட்டண வீதமொன்று நிர்ணயிக்கப்படும்.

### வருமான வரி விலக்களிப்புக்கள்[2]

இனிவரவிருப்பவை - உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நாட்டிற்கான முறி மீது எவரேனும் வதிவற்ற நபர் மூலமான வருவாய்கள்.

- இலங்கை அபிவிருத்தி முறிகள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கான முறிகள் மீது எவரேனும் வதியும் நபர் மூலம் உழைக்கப்பட்ட வட்டி வருமானம்.
- வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது எவரேனும் நபரினால் உழைக்கப்பட்ட வட்டிவருமானம் (5ஆண்டுகள்)
- நிதி நிறுவனமொன்றில் பேணப்பட்ட ஏதேனும் வைப்புக் கணக்கு தொடர்பில் 18 வயதிற்கும் குறைந்த சிறார்களினால் உழைக்கப்பட்ட மாதமொன்றிற்கு ரூ.5,000 வரையிலான வட்டி வருமானம்
- இலங்கையில் வதியும் எவரேனும் நபர் ஒருவருக்கு இலங்கைக்கு வெளியில் வதியும் எவரேனும் நபரொருவரினால் வழங்கப்பட்ட கடன்கள் மீது அத்தகைய நபருக்குச் செலுத்தப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகள் (இலங்கையிலுள்ள அதன் உடமை கம்பனி அல்லது துணைக் கம்பனி ஒன்றிற்கு வதிவற்றோர் கம்பனி ஒன்றினால் வழங்கப்பட்ட கடன்களுக்கு பிரயோகிக்க முடியாது)

### உயர் பெறுமதி உள்நாட்டு முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை முன்னேற்றுவதற்கான முதலீட்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்

இனிவரவிருப்பவை - பாரியளவிலான செயற்றிட்டங்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைப் பின்வருமாறு வழங்குதல்:

2 தனியாள் வருமான வரி மற்றும் கம்பனி வருமான வரி ஆகிய இரண்டிற்கும் வருமான வரி விலக்களிப்புக்கள் பிரயோகிக்கப்படுகின்றது.

| வரி அளவீடுகள் | முதலீட்டின் அளவு | | |
|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் அதிகமானது | ஐ.அ.டொலர் 100 பில்லியனுக்கும் அதிகமானது | ஐ.அ.டொலர் 50 பில்லியனுக்கும் அதிகமானது |
| முதலீட்டு தொகையின் 150 சதவீதம் வரையிலான மூலதன படிக்கொடுப்பனவு | 150 சதவீதம் மற்றும் 25 ஆண்டுகள் | 150 சதவீதம் மற்றும் 10 ஆண்டுகள் | 100 சதவீதம் மற்றும் 10 ஆண்டுகள் |
| முற்கூட்டிய வரிகளின் நீக்கம் | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி : விலக்களிப்பு<br>துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை: விலக்களிப்பு செஸ் தீர்வை: விலக்களிப்பு<br>எதிர்ப்பட்டியல் விடயங்கள் மீதான தீர்வை மற்றும் ஏனைய வரிகள்: எதிர்மறைப் பட்டியல் பிரயோகிக்கப்பட முடியாது | | |
| வதிவற்றோர் நபர் ஒருவருக்கு கம்பனியினால் வழங்கப்பட்ட பங்கிலாப வரி | பூச்சியம் | விபரம் கிடைக்கவில்லை | விபரம் கிடைக்கவில்லை |
| இலங்கைக்கு வெளியே தொழில்புரியும் தொழிலாளர்களின் தொழில் வருமானம் மீதான பிடித்து வைத்தல் வரி | விலக்களிப்பு | விபரம் கிடைக்கவில்லை | விபரம் கிடைக்கவில்லை |

### பெறுமதிசேர் வரி

2018 யூலை 02 - வைத்திய அறைகளின் கட்டணங்களைத் தவிர ஏனைய நலக்கவனிப்பு சேவைகளின் செலவு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

2018 நவெம்பர் 01 - மரக்குற்றி மீது பிரயோகிக்கப்படக் கூடிய பெறுமதிசேர் வரியானது 15 சதவீதத்திலிருந்து 5 சத வீதத்திற்கு குறைக்கப்பட்டது

- துணிகள் இறக்குமதியானது பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

இனிவரவிருப்பவை - ஏற்றுமதி சார்ந்த முதலீட்டுச் சபை கம்பனிகளால் குறிக்கப்பட்ட ஆடைகளின் உள்நாட்டு விற்பனை மீது பிரயோகிக்கப்படக் கூடிய துண்டின் அடிப்படையிலான பெறுமதிசேர் வரியானது ரூ.75 இலிருந்து ரூ.100 இற்கு அதிகரித்தல்.

- வீட்டுத்தொகுதியிலுள்ள வீட்டு அலகுகளின் விற்பனை மீது பெறுமதிசேர் வரி விதித்தல்.

### தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி

2018 ஏப்பிறல் 01 - இறக்குமதியாளரினால் குடிவகை விற்பனை மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விலக்கு அவராலேயே நீக்கப்பட்டது.

- நாணயச் சட்ட விதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குமுறைகளினால் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிகள் மீது விலக்களிக்கப்பட்டது.

2018 யூலை 30 - குடிவகை இறக்குமதிகள் மற்றும் குடிவகை உற்பத்திகளின் வியாபாரத்திலிருந்தான வருவாய் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விலக்கு நீக்கப்பட்டது.

- மேலும், பின்வரும் பொருட்கள் மற்றும் பணிகள் மீது தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விலக்களிக்கப்பட்டது.

    - 2018 ஏப்பிறல் 01இலிருந்து தொடங்குகின்ற மூன்று ஆண்டு காலப்பகுதிக்கு தயாரிப்பாளர்களால் விற்பனை செய்யப்படும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தேங்காய்ப்பால், தேங்காய் எண்ணெய், பூனக், தோல் நீக்கப்பட்ட தேங்காய், தேங்காய் சிரட்டைகள் அல்லது இளநீர்.

- 2017 ஒகத்து 01ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் வழங்கப்படும் ஏதேனும் பணிகளில் கட்டடவாக்க ஒப்பந்தக்காரர்களால் வழங்கப்படுகின்ற பணிகள்
- இயக்க விசையற்ற கருவிகள் மற்றும் பனிக்கடற்படகு, ஓடம், தோணி, சறுக்கு விளையாட்டுக்கள் மற்றும் முக்குளித்தல் போன்ற நீர் சார்ந்த விளையாட்டுக்களுக்கான உபகரணங்களின் இறக்குமதி
- சுங்க நோக்கங்களிற்கான இணக்கத்துக்குட்பட்ட பண்ட விளக்கங்கள் மற்றும் குறியீட்டு இலக்கத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வலுவற்ற கருவிகள் மற்றும் ஹேங் கிளைடிங், பலூன், வான்குடை மற்றும் பரா கிளைடிங் போன்ற வான் சார்ந்த விளையாட்டுக்களுடன் தொடர்புடைய உபகரணங்கள் மீதான இறக்குமதி.
- மீள் ஏற்றுமதி நோக்கிற்கான வெட்டப்பட்ட மற்றும் மெருகூட்டப்பட்ட இரத்தினக்கற்களின் இறக்குமதி.
- வேளாண்மை விடயம் தொடர்பான அமைச்சிற்கு செயலக அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மீது இறைக்கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளவாறான இலங்கையில் தயாரிக்கப்படாத பொருட்கள் மற்றும் பச்சை வீடு மற்றும் பொலித்தீன் மற்றும் சுரங்கத்திற்கான உபகரணங்கள், பச்சை வீட்டுக் கட்டுமானங்களிற்கான மூலப்பொருட்கள் போன்றவற்றின் இறக்குமதி.

இனிவரவிருப்பவை

- சிகரெட் உற்பத்தி மீதான தேசத்தை கட்டியெழுப்பும் வரி விலக்களிப்பினை நீக்குதல்.
- பிரதான கட்டுமான ஒப்பந்தக்காரர் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினை நீக்குதல்.
- தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட பட்டைதீட்டும் பணி வழங்குநர்களினால் வெட்டி பட்டைதீட்டப்பட்டதன் பின்னர் மீள் ஏற்றுமதிக்காக கரடு முரடான பதப்படுத்தப்படாத இரத்தினக் கற்களின் இறக்குமதி மீது விலக்களிப்புச் செய்தல்.
- கரைகடந்த டிஜிட்டல் சேவைகள் உள்ளடங்கலாக பொருட்கள் அல்லது பணிகள் கொள்வனவிற்காக இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளைப் (கடன் மற்றும் பற்று அட்டைகள்) பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு கொடுப்பனவுகள் மீது 3.5 சதவீத வீதமொன்றில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினை விதிப்பதுடன் வெளிநாட்டு கொள்வனவுகளுக்கான கடன் அட்டைகளின் பயன்பாட்டின் மீது ஏற்கனவேயுள்ள 2.5 சதவீத தபால் தீர்வை வீதத்தினை நீக்குதல்.
- வெளிநாட்டு நாணயத்தை பெற்றுக் கொள்கின்ற விடுதிகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினை விலக்களித்தல்.
- லூசேர்னா (அல்பல்பா) மற்றும் பெல்லட்ஸ் இறக்குமதி மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினை நீக்கல்.

**கலால் தீர்வை**

2018 பெப்புருவரி 21 - இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட எடுத்துச் செல்ல முடியாத குடிபானங்களின் மீதான கலால் தீர்வை தொகையொன்றிற்கு ரூ.15 இலிருந்து ரூ.6 இற்குக் குறைக்கப்பட்டது.

2018 ஒத்தோபர் 04 - முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளால் இறக்குமதி செய்யப்பட்ட எடுத்துச் செல்ல முடியாத குடிபானங்களின் மீதான கலால் தீர்வை விலக்களிக்கப்பட்டது.

2019 மாச்சு 06 - அற்ககோல் கொள்ளளவினை அடிப்படையாகக் கொண்ட மதுபானத்தின் மீதான கலால் தீர்வை பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது;

| வகை | முன்னைய வரி வீதம் (லீற்றர் ஒன்றிற்கான அற்ககோலின் ரூபாய்கள்) | தற்போதைய வரி வீதம் (லீற்றர் ஒன்றிற்கான அற்ககோலின் ரூபாய்கள்) |
|---|---|---|
| விசேட சாராயம் | 3,300 | 3,300 |
| ஏனைய சாராயம் | 3,300 | 3,550 |
| இலங்கையில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானம் | 3,300 | 3,550 |
| 5 சதவீதத்திற்கு குறைவான பியர் | 2,400 | 2,700 |
| 5 சதவீதத்திற்கு கூடுதலான பியர் | 2,400 | 2,700 |
| உள்ளூர் வைன் | ரூ.100/ தொகை லீற்றருக்கு | ரூ.600/ சரியான லீற்றருக்கு |

- இறக்குமதி செய்யப்பட்ட மதுபானத்தின் மீதான கலால் தீர்வை பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது;
    - மோல்ட் சாராயத்தின் (பியர்) மீதான கலால் தீர்வையானது லீற்றரொன்றிற்கான ரூ.50 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.55 ஆக அதிகரித்துள்ளது.
    - வைனின் மீதான கலால் தீர்வையானது லீற்றரொன்றிற்கான ரூ.100 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.110 ஆக அதிகரித்துள்து.
    - ஏனைய மதுபானங்களின் மீதான கலால் தீர்வையானது லீற்றரொன்றிற்கான ரூ.200 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.215 ஆக அதிகரித்துள்ளது.

**கலால் (சிறப்பு ஏற்பாடுகள்)**

2018 மே 31

- ஜெட் எரிபொருள் வகையிலான மண்ணெண்ணெய் தவிர்ந்த ஏனைய மண்ணெண்ணெய் மீதான கலால் தீர்வையானது லீற்றரொன்றிற்கு ரூ.7 விதிக்கப்பட்டது.

2018 யூன் 14

- மண்ணெண்ணெய் மீதான லீற்றரொன்றிற்கான ரூ.7 என்ற கலால் தீர்வை நீக்கப்பட்டது.

2018 ஓகத்து 01

- 1,000 கன சென்ரி மீற்றர் உருளை இயலளவினை விஞ்சாத உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வையானது இயந்திரத்தின் கன சென்ரி மீற்றரொன்றிற்கு ரூ.1,750 இலிருந்து அலகொன்றிற்கு ரூ.1.5 மில்லியன் அல்லது கன சென்ரி மீற்றரொன்றுக்கு ரூ.1,750 இல் உயர்ந்த பெறுமதிக்குத் திருத்தப்பட்டது.
- 1,000 கன சென்ரி மீற்றர் உருளை இயலளவினை விஞ்சாத கலப்பு, கலப்பு மற்றும் இலத்திரனியல் உந்து ஊர்திகளின் பிளக் மீதான கலால் தீர்வையானது கன சென்ரி மீற்றரொன்றிற்கு ரூ. 1,250 இலிருந்து அலகொன்றிற்கு ரூ.1.25 மில்லியனுக்குத் திருத்தப்பட்டது.
- நீளத்தில் 72 மில்லி மீற்றரிற்கு விஞ்சியதும் 84 மில்லி மீற்றரிற்கு விஞ்சாததுமான சிகரெட்டுக்கள் மீதான கலால் தீர்வையானது ஒவ்வொரு 1,000 சிகரெட்டிற்கும் ரூ.30,550 இலிருந்து ஒவ்வொரு 1,000 சிகரெட்டிற்கும் ரூ.33,550 இற்கு அதிகரிக்கப்பட்டது.
- நீளத்தில் 84 மில்லி மீற்றரிற்கு விஞ்சாத சிகரெட்டுக்கள் மீதான கலால் தீர்வையானது ஒவ்வொரு 1,000 சிகரெட்டிற்கும் ரூ.34,250 இலிருந்து ஒவ்வொரு 1,000 சிகரெட்டிற்கும் ரூ.37,675 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2018 நவெம்பர் 02

- தன்னியக்க டீசலின் இறக்குமதி மீதான கலால் தீர்வையானது லீற்றரொன்றிற்கான ரூ.13 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.6 ஆக குறைவடைந்துள்ளது.

2018 திசெம்பர் 03

- பழங்கள் அல்லது மரக்கறிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் இனிப்புக் குடிபானங்கள், சக்தி வழங்கும் குடிபானங்கள் மற்றும் குடிபானங்கள் என்பனவற்றின் உற்பத்தியில் உள்ளடக்கப்படும் சீனியின் 100 மி.மீற்றருக்கு 6 கிறாம் நீங்கலாக லீற்றரொன்றிற்கு ரூ.12 அல்லது கிறாமொன்றிற்கு 30 சதம் கொண்ட தீர்வையில் உயர்ந்த பெறுமதிக்கு 30 சதம் கொண்ட கலால் தீர்வையொன்று விதிக்கப்பட்டதுடன் இது அத்தகைய உற்பத்தியில் உள்ளக்கப்பட்டிருக்கும் சீனியின் கிறாமொன்றுக்கு 50 சதம் கொண்ட முன்னைய வீதத்தினைப் பதிலீடு செய்துள்ளது.

2019 மாச்சு 06

- சிகரெட் மீதான கலால் தீர்வையானது 12 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.
- இனிப்பு குடிபானங்கள் மீதான கலால் தீர்வையானது மிகையான விலக்களிப்பு அளவுகளில் சீனியின் கிறாமொன்றிற்கான 30 சதத்திலிருந்து சீனியின் கிறாமொன்றிற்கு 40 சதமாக அதிகரித்துள்ளது.
    - சீனியை உள்ளடக்கிய குடிபானங்களின் விலக்களிப்பு அளவுகள் பின்வருமாறு குறைக்கப்பட்டது;
        - காபனேற்றிய குடிபானங்கள் 100 மில்லி லீற்றரிற்கு 6 கிறாமிலிருந்து 100 மில்லி லீற்றருக்கு 4 கிறாமுக்கு
        - பழவகையை அடிப்படையாகக் கொண்ட குடிபானங்கள் 100 மில்லி லீற்றருக்கு 9 கிறாமிலிருந்து 100 மில்லி லீற்றருக்கு 8 கிறாமுக்கு
    - தாவர எண்ணெய் கொழுப்பு அமிலங்கள் மீதான கலால் தீர்வையானது பின்வருமாறு குறைக்கப்பட்டது.
        - தாவர எண்ணெய் கொழுப்பு அமிலங்கள் 25 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு
        - 70 ரலோ கொழுப்பு அமிலங்கள் 25 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு
- குளிரூட்டிகள் மீதான கலால் தீர்வையானது 17 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.
- இயந்திரங்களுடன் இணைக்கப்பட்ட அடிச்சட்டங்களுடன் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் மீதான கலால் தீர்வையானது ரூ 700,000 இலிருந்து ரூ 500,000 இலிருந்து குறைக்கப்பட்டது.

| | |
|---|---|
| | - 2,000 கன சென்ரி மீற்றருக்கு குறைந்த இயந்திர இயலளவுடனான மோட்டார் வாகனங்கள் மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது. |
| | - இறந்தவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் கலப்பு, இயந்திர வான்கள் மற்றும் ஒற்றை வாடகை கார்கள் என்பவற்றின் மீதான கலால் தீர்வையானது குறைக்கப்பட்டது. |
| | - 2,000 கிலோ கிராமிற்கு குறைவான இயலளவினை உடைய சரக்கு ஏற்றிச் செல்லும் பாரவூர்திகள் மீதான கலால் தீர்வை குறைக்கப்பட்டது. |
| **சுங்கத் தீர்வை** | |
| 2018 ஏப்பிறல் 18 | - தங்க இறக்குமதியின் மீது 15 சதவீத சுங்கத் தீர்வை விதிக்கப்பட்டது. |
| 2018 மே 03 | - பீடி இலைகளின் இறக்குமதி மீது சுங்கத்தினால் விதிக்கப்பட்ட குறிப்பிட்ட தீர்வையானது கிலோ கிராமொன்றிற்கு ரூ.250 இலிருந்து ரூ.750இற்கு அதிகரிக்கப்பட்ட அதேவேளையில் பெறுமதிக்கேற்ற தீர்வை வீதம் 30 சதவீதமாகக் காணப்படுகின்றது. |
| | - புகையிலை இறக்குமதி மீது 85 சதவீத பெறுமதிக்கேற்ற தீர்வை வீதம் மற்றும் சுங்கத் தீர்வையில் உயர்ந்த பெறுமதிக்குப் பதிலான வீதமொன்றாக கி.கிறாமொன்றிற்கு ரூ.150 கொண்ட குறிப்பிட்ட தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2018 மே 11 | - பெற்றோல் (92 ஒக்டேன்) இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூ.23 இலிருந்து ரூ.9.58 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.25.42 ஆகும். |
| | - பெற்றோல் (95 ஒக்டேன்) இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூ.23 இலிருந்து ரூ.9.41 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.25.59 ஆகும். |
| | - தன்னியக்க டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூ.11 இலிருந்து ரூ.9.15 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.5.85 ஆகும். |
| | - சிறப்பு டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூ.11 இலிருந்து ரூ.4.45 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.10.55 ஆகும். |
| 2018 மே 16 | - பெற்றோல் (92 ஒக்டேன்) இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை லீற்றரொன்றிற்கு ரூ.35 இலிருந்து ரூ.25.42 இற்கு குறைக்கப்பட்டதுடன் தீர்வை தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூ.9.58 இலிருந்து ரூ.7 இற்கு குறைக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.18.42 ஆகும். |
| | - பெற்றோல் (95 ஒக்டேன்) இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை லீற்றரொன்றிற்கு ரூ.35 இலிருந்து ரூ.25.59 இற்கு குறைக்கப்பட்டதுடன் தீர்வை தளர்த்தல் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டது. |
| | - தன்னியக்க டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை லீற்றரொன்றிற்கு ரூ.15 இலிருந்து ரூ.5.85 இற்கு குறைக்கப்பட்டதுடன் தீர்வை தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூ.9.15 இலிருந்து ரூ.2 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக் கூடிய வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.3.85 ஆகும். |
| | - சிறப்பு டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை லீற்றரொன்றிற்கு ரூ.15இலிருந்து ரூ.10.55இற்கு குறைக்கப்பட்டதுடன் தீர்வை தளர்த்தல் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டது. |
| 2018 யூலை 11 | - பீடி இலைகளின் இறக்குமதி மீது சுங்கத்தினால் விதிக்கப்பட்ட குறிப்பிட்ட தீர்வையானது கிலோ கிறாமொன்றிற்கு ரூ.750 இலிருந்து ரூ.250 இற்கு குறைக்கப்பட்ட அதேவேளையில் பெறுமதிக்கேற்ற தீர்வை வீதம் 30 சதவீதமாகக் காணப்படுகின்றது. |
| 2018 செத்தெம்பர் 19 | - சீனி இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை தளர்த்தல் கி.கிறாமொன்றிற்கு ரூ.4 ஆக விதிக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் கி.கிறாமொன்றிற்கு ரூ.8 ஆகும். |
| | - பால்மா மீதான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் கி.கிறாமொன்றிற்கு ரூ.223 இலிருந்து ரூ.175 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் கி.கிறாமொன்றிற்கு ரூ.50 ஆகும். |
| 2018 ஒத்தோபர் 03 | - பால்மா மீதான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் கி.கிறாமொன்றிற்கு ரூ.175 இலிருந்து ரூ.223 இற்கு அதிகரிக்கப்பட்டது. எனவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் கி.கிறாமொன்றிற்கு ரூ.2 ஆகும். |
| 2018 ஒத்தோபர் 17 | - பால்மா மீதான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் கி.கிறாமொன்றிற்கு ரூ.223 இலிருந்து ரூ.210 ஆகக் குறைக்கப்பட்டது. எனவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் கி.கிறாமொன்றிற்கு ரூ.15 ஆகும். |
| 2018 நவெம்பர் 02 | - பெற்றோலின் (92 ஒக்டேன்) இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை தளர்த்தல் லீற்றறொன்றிற்கு ரூ.7 இலிருந்து ரூ.13 ஆக அதிகரிக்கப்பட்டது. எனவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.1,242 ஆகும். |

| | | |
|---|---|---|
| | - | கோதுமை தானியங்களின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் கி.கிறாமொன்றிற்கு ரூ.6 இலிருந்து ரூ.9 ஆக அதிகரித்துள்ளது. எனவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் கி.கிறாமொன்றிற்கு ரூ.3 ஆகும். |
| 2018 நவெம்பர் 16 | - | பெற்றோலின் (92 ஒக்டேன்) இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை லீற்றரொன்றிற்கு ரூ.25.42 இலிருந்து ரூ.35 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் தீர்வைத் தளர்த்தல் லீற்றரொன்றிக்கு ரூ.13 இலிருந்து ரூ.20 இற்கு அதிகரிக்கப்பட்டது. எனவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.15 ஆகும். |
| | - | பெற்றோலின் (95 ஒக்டேன்) இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை லீற்றரொன்றிற்கு ரூ 25,59 இலிருந்து ரூ.35 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் தீர்வைத் தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூ.9.41 இலிருந்து ரூ.3 ஆக குறைவடைந்துள்ளது. ஆகவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.32 ஆகும். |
| 2018 நவெம்பர் 20 | - | தன்னியக்க டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூ.2 இலிருந்து ரூ.5 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.0.85 ஆகும். |
| 2018 திசெம்பர் 28 | - | பெற்றோல் (95 ஒக்டேன்) இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை தளர்த்தல் மீளப்பெறப்பட்டது. எனவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.35 ஆகும். |
| 2019 சனவரி 12 | - | பெற்றோல் (92 ஒக்டேன்) இறக்குமதி மீதான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூ.20 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.19 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.16 ஆகும். |
| | - | தன்னியக்க டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூ.5 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.3 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.2.85 ஆகும். |
| 2019 மாச்சு 06 | - | பதனிடப்படாத ஏதெயில் அல்ககோல் மீதான சுங்கத் தீர்வை லீற்றரொன்றிற்கு ரூ.200 இனால் ரூ.1,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | பந்தய ஊர்தி மற்றும் பந்தய ஊர்திகளின் சக்கரங்களின் இறக்குமதி மீதான 30 சதவீதமான சுங்கத் தீர்வை நீக்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | - | பழவகை குடிபானங்களின் இறக்குமதி மீது பிரயோகிக்கத்தக்க சுங்கத் தீர்வை திருத்துதல். |
| **செஸ்** | | |
| 2018 சனவரி 01 | - | சுவையூட்டப்பட்ட மற்றும் சுவையூட்டப்படாத தேயிலையின் இறக்குமதி மீது குறிப்பான கி.கிறாமொன்றிற்கு ரூ.10 மற்றும் விதிக்கப்பட்ட செஸ்சில் உயர்வானது எதுவோ அதன் மீது என்பவற்றிற்குப் பதிலாக கொழும்பு தேயிலை சராசரி விலையின் பெறுமதிக்கேற்ற செஸ் தீர்வை 2.5 சதவீதமாக அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2018 மாச்சு 06 | - | ரெண்டு இலைகள் (பீடீ இலைகள்) மீது பிரயோகிக்கப்படும் செஸ் தீர்வையானது கி.கிறாமொன்றிற்கு ரூ.2,500 இலிருந்து ரூ.3,500 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | உலர்ந்த பழங்கள், உடன் அல்லது உலர்ந்த காய்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட அல்லது பழுதுபார்க்கப்பட்ட குளிரேற்றிகள், உறை நிலைகள் என்பவற்றின் மீதான செஸ் தீர்வை குறைக்கப்பட்டது. |
| | - | மோட்டார் வாகன உதிர்ப்பாகங்கள், உக்கக்கூடியதும் மற்றும் உரமாக்கக்கூடியதுமான பிளாத்திக்குகள் மீதான செஸ் தீர்வைகள் திருத்தப்பட்டன. |
| | - | இறக்குமதி செய்யப்பட்ட கட்டடவாக்கப் பொருட்கள் மீதான செஸ் தீர்வைகள் 30 சதவீதத்தால் குறைக்கப்பட்டன. |
| | - | பந்தய ஊர்தி மற்றும் பந்தய ஊர்தி சக்கரங்களின் இறக்குமதி மீதான 15 சதவீதம் அல்லது கி.கிறாமொன்றிற்கு ரூ.90 என்ற செஸ் தீர்வை வீதம் நீக்கப்பட்டது. |
| **சிறப்புப் பண்டத் தீர்வை** | | |
| 2018 சனவரி 01 | - | உமி நீக்கப்பட்ட மண்ணிற அரிசி, ஓரளவு தீட்டப்பட்ட அல்லது முழுமையாகத் தீட்டப்பட்ட பச்சை அரிசி (கெக்குளு), நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை), சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) மற்றும் உடைக்கப்பட்ட அரிசி என்பவற்றின் இறக்குமதி மீதான கி.கிறாமொன்றிற்கு 25 சதம் கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை 2018 மாச்சு 31 வரையான காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 சனவரி 19 | - | மாசிக் கருவாடு, உழுந்து, மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், உழுத்தமா மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட மீன் என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | - | துருவப்பட்ட அல்லது தூளாக்கப்பட்ட அனைத்து வகையான பாற்கட்டிகளின் இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.200 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது. |
| 2018 பெப்புருவரி 01 | - | சோளத்தின் இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.10 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை 31 நாட்கள் வரையான காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 பெப்புருவரி 16 | - | சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 பெப்புருவரி 24 | - | உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.1 இலிருந்து ரூ.30 இற்கு 2018 மாச்சு 31 வரையான காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2018 மாச்சு 08 | - | மக்கரல், பட்டாணி, கொண்டைக்கடலை, தட்டைப் பயறு மற்றும் குரக்கன் என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 மாச்சு 20 | - | உழுந்து இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.60 இலிருந்து ரூ.100 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2018 ஏப்பிறல் 01 | - | உமி நீக்கப்பட்ட மண்ணிற அரிசி, ஓரளவு தீட்டப்பட்ட அல்லது முழுமையாகத் தீட்டப்பட்ட பச்சை அரிசி (கெக்குளு) , நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை), சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) மற்றும் உடைக்கப்பட்ட அரிசி என்பவற்றின் இறக்குமதி மீது சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு 25 சதமாக 31 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது. |
| | - | உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை மூன்று மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| | - | யோகட், வெண்ணெய்க்கட்டி, பாலுற்பத்திப் பொருட்கள், உள்ளி, உடன் தோடம்பழங்கள், உடன் திராட்சை, உடன் அப்பிள், வெந்தயம், குரக்கன் மா, நிலக்கடலை, கடுகு மற்றும் உப்பு என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறுமாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 மே 02 | - | பின்வரும் உணவுப்பொருட்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது.<br>- உருளைக்கிழங்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.30 இலிருந்து ரூ.40 இற்கு<br>- பெரிய வெங்காயம் கி.கிறாமொன்றிற்கு ரூ.1 இலிருந்து ரூ.40 இற்கு |
| 2018 மே 08 | - | முள்ளற்ற மீன்துண்டுகள் மற்றும் ஏனைய மீன் இறைச்சி (மக்கரல் மீன், முரல் மீன், மல்லன் மீன் மற்றும் தோரா மீன் அல்லாத) தவிர்ந்த உடன் அல்லது குளிரூட்டப்பட்ட அல்லது உறையவைக்கப்பட்ட மீன், பயறு, மங்குஸ்தான் (உடன் மற்றும் உலர்த்தியவை), தோடம்பழங்கள் (உலர்த்தியவை) பியர்ஸ், செரி, முந்திரிகை வற்றல் மற்றும் விதை, கிவிப் பழம், நெத்தலி மற்றும் கருவாடு போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறுமாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 மே 09 | - | சிவப்பு மற்றும் மஞ்சள் பருப்பு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு பின்வருமாறு நீடிக்கப்பட்டது.<br>- முழுமையான பருப்பு கி.கிறாமொன்றிற்கு ரூ.1 இலிருந்து ரூ.7 இற்கு<br>- உடைக்கப்பட்ட பருப்பு கி.கிறாமொன்றிற்கு ரூ.3 இலிருந்து ரூ.12 இற்கு |
| 2018 மே 21 | - | சின்ன வெங்காயம், பேரீச்சம் பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை), திராட்சை (உலர்த்தியவை), நற்சீரகம், பெருஞ்சீரகம், மற்றும் மாஜரீன் என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 யூன் 01 | - | மரக்கறி எண்ணெய் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.20 ஆல் ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2018 யூன் 14 | - | முரல் மீன், மல்லன் மீன், தோரா மீன், மற்றும் தேங்காய்ச் சொட்டு என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை பன்னிரெண்டு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| | - | உழுந்து இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமிற்கு ரூ.100 இலிருந்து ரூ.150 இற்கு பன்னிரெண்டு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2018 யூலை 19 | - | துருவப்பட்ட அல்லது தூளாக்கப்பட்ட பாற்கட்டிகள், மாசிக் கருவாடு, மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், உழுத்தமா மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட மீன் என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை பன்னிரெண்டு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 ஓகத்து 01 | - | முள்ளற்ற மீன் துண்டுகள் மற்றும் ஏனைய மீன் இறைச்சிகள் தவிர்ந்த உடன், குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்ட மீன் என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை இரண்டு மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு 10 சதவீதம் அல்லது கி.கிறாமொன்றிற்கு ரூ.100 என்பதில் உயர்ந்த பெறுமதியிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இற்குத் திருத்தப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2018 ஓகத்து 09 | - | சோள இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.10 கொண்ட சிறப்பு பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது. |
| 2018 ஓகத்து 16 | - | சீனி இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 ஓகத்து 25 | - | மரக்கறி எண்ணெய் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ. 20 ஆல் ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2018 செத்தெம்பர் 08 | - | மெக்கரல் மீன், பட்டாணி, கொண்டைக்கடலை, தட்டைப் பயறு மற்றும் குரக்கன் என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 செத்தெம்பர் 18 | - | சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கிறாமொன்றிற்கு ரூ.30 என்ற கலால் தீர்வை மூலமும், கி.கிறாமொன்றிற்கு ரூ.12 என்ற சுங்கத் தீர்வை மூலமும், 7.5 சதவீத துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை மூலமும் 2 சதவீத தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மூலமும் பதிலீடு செய்யப்பட்டது. |
| 2018 ஒத்தோபர் 01 | - | மீன் (உடன், குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்ட) இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது 10 சதவீதம் அல்லது ஒரு ஆண்டு காலப்பகுதிக்கான கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.100 என்பவற்றில் உயர்வான பெறுமதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | யோகட், வெண்ணெய்க் கட்டி, பால் உற்பத்தி, திராட்சை (உடன்), அப்பிள் (உடன்), வெந்தயம், குரக்கன், நிலக்கடலை (ஓட்டுடன்) கடுகு மற்றும் உப்பு என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 நவெம்பர் 02 | - | உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயத்தின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது 31 நாட்கள் காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| | - | பின்வரும் உணவுப் பொருட்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை மூன்று மாத காலப்பகுதிக்குப் பின்வருமாறு குறைக்கப்பட்டது.<br>- கடலை (முழுமையானது) கி.கிறாமொன்றிற்கு ரூ.7 இலிருந்து ரூ.2 இற்கு<br>- கடலை (உடைத்தது) கி.கிறாமொன்றிற்கு ரூ.10 இலிருந்து ரூ.5 இற்கு<br>- உழுந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.150 இலிருந்து ரூ.125 இற்கு<br>- மஞ்சள் பருப்பு (முழுமையானது) கி.கிறாமொன்றிற்கு ரூ.7 இலிருந்து ரூ.2 இற்கு<br>- மஞ்சள் பருப்பு (உடைத்தது) கி.கிறாமொன்றிற்கு ரூ.12 இலிருந்து ரூ.7 இற்கு |
| | - | சீனி இறக்குமதி மீதான கி.கிறாமொன்றிற்கு ரூ.30 என்ற கலால் தீர்வை, ரூ.12 என்ற சுங்கத் தீர்வை, 7.5 சதவீத துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை மற்றும் 2 சதவீத தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பன மூன்று மாத காலப்பகுதிக்கான சிறப்புப் பண்டத் தீர்வை மூலம் பின்வருமாறு பதிலீடு செய்யப்பட்டது.<br>- வெள்ளைப் பளிங்குருவான கரும்புச் சீனி மற்றும் வெள்ளைப் பளிங்குருவான பீற் சீனி என்பன கி.கிறாமொன்றிற்கு ரூ.32<br>- கரும்பு மற்றும் பீற் சீனி கி.கிறாமொன்றிற்கு ரூ.35 |
| 2018 நவெம்பர் 08 | - | பாசிப்பயறு, உடன் மற்றும் உலர்த்தப்பட்ட மங்குஸ்தான், உலர்த்தப்பட்ட தோடம்பழங்கள், பியர்ஸ், செரி, வற்றல் மற்றும் விதைகள், கிவிப் பழம், நெத்தலி மற்றும் கருவாடு என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 நவெம்பர் 24 | - | பின்வரும் உணவுப் பொருட்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்குப் பின்வருமாறு குறைக்கப்பட்டது.<br>- கடலை (முழுமையானது) கி.கிறாமொன்றிற்கு ரூ.15 இலிருந்து ரூ.5 இற்கு<br>- கடலை (உடைத்தது) கி.கிறாமொன்றிற்கு ரூ.18 இலிருந்து ரூ.8 இற்கு |
| 2018 திசெம்பர் 03 | - | உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை மூன்று மாத காலப்பகுதிக்கு ரூ.40 இலிருந்து ரூ.20 இற்குக் குறைக்கப்பட்டது. |
| 2019 பெப்புருவரி 02 | - | கடலை (முழுமையான மற்றும் உடைக்கப்பட்ட), சிவப்புப் பருப்பு (முழுமையான மற்றும் உடைக்கப்பட்ட), மஞ்சள் பருப்பு (முழுமையான மற்றும் உடைக்கப்பட்ட), பீற் சீனி, கரும்பு சீனி, வெள்ளைப் பளிங்குருவான கரும்புச் சீனி மற்றும் வெள்ளைப் பளிங்குருவான பீற் சீனி என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019 பெப்புருவரி 08 | - | உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை மூன்று மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றுக்கு ரூ.20 இலிருந்து ரூ.50 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2019 பெப்புருவரி 09 | - | சோள இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.10 இலிருந்து ரூ.20 இற்கு அதிகரிக்கப்பட்டது. |

2019 மாச்சு 06 - உள்நாட்டு பெறுமதி சேர்ப்பின் மீது பிரயோகிக்கப்படும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்குப் பதிலாக தாவர எண்ணெய் இறக்குமதி மீது சிறப்புப் பண்டத் தீர்வை விதிக்கப்பட்டது.

**துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை**

2018 ஏப்பிறல் 05 - உயர் தொழில்நுட்ப இயந்திரம் மற்றும் உபகரணங்களின் இறக்குமதி மீது 2.5 சதவீத சலுகை வீதமொன்று விதிக்கப்பட்டது.

2019 மாச்சு 06 - உயர் தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் உபகரண விடயங்கள் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை 7.5 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

- ஏதேனும் முதலீட்டுச் சபைக் கம்பனியினால் உற்பத்தி செய்யப்பட்ட மகிழ்வான அல்லது பயணத்திற்கான கப்பல்கள் மற்றும் கப்பல்களுடன் தொடர்பானவை விற்கப்படும் போதும் இன்னொரு முதலீட்டுச் சபைக் கம்பனிக்கு அத்தகைய கப்பல்கள் மற்றும் கப்பல்களுடன் தொடர்புபட்ட அதன் வியாபாரங்களுக்கு வாடகைக்குவிடும் போதும் விதிக்கப்படும் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது.
- சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கும் உள்நாட்டுத் தயாரிப்புக் கைத்தொழிலின் முற்கூட்டிய கிரயத்தினைக் குறைப்பதற்கும் தெரிவுசெய்யப்பட்ட விடயங்கள் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை குறைக்கப்பட்டது.
- தையல் இயந்திரங்கள் மற்றும் அரைத்தல் அல்லது பொலிவாக்குதலுடன் தொடர்பான இயந்திரங்கள் என்பனவற்றின் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது.
- லுசேர்னா (அல்பல்பா) மற்றும் பெல்லட்ஸ் இறக்குமதி மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது.

**உந்து ஊர்திகள் மீதான ஆடம்பர வரி**

2019 மாச்சு 06 - உள்நாட்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஊர்திகள் தொடர்பிலான சரக்குக் கட்டணம் உள்ளடங்கலான கிரயப் பெறுமதி அல்லது உற்பத்தியாளர்களின் விலைகள் என்பவற்றின் மீது இறக்குமதி செய்யப்பட்ட உந்து ஊர்திகள் மீது ஆடம்பர வரியற்ற எல்லைகளை விஞ்சிய தொகையின் அடிப்படையில் ஆடம்பர வரி விதிக்கப்பட்டுள்ளது.

| வாகனத்தின் வகை | ஆடம்பர வரியற்ற எல்லை | வீதம் (அ) |
|---|---|---|
| டீசல் | ரூ.3.5 மில்லியன் | 120% |
| பெற்றோல் | ரூ.3.5 மில்லியன் | 100% |
| கலப்பு டீசல் | ரூ.4.0 மில்லியன் | 90% |
| கலப்பு பெற்றோல் | ரூ.4.0 மில்லியன் | 80% |
| இலத்திரனியல் | ரூ.6.0 மில்லியன் | 60% |

(அ) ஆடம்பர வரியற்ற எல்லையை விஞ்சிய தொகை மீது பிரயோகிக்கப்படும்

**காபன் வரி**

இனிவரவிருப்பவை - வர்த்தக வங்கிகள் மீதான செலுத்தப்படக்கூடிய ஆகக்கூடிய காபன் வரி பின்வருமாறு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது:

| எரிபொருள் வகை | 5 ஆண்டுகளுக்குக் குறைந்த | | 5 இலிருந்து 10 ஆண்டுகள் வரையான | | 10 ஆண்டுகளுக்கும் கூடிய | |
|---|---|---|---|---|---|---|
| | ஏற்கனவேயுள்ள வரி | புதிய வரி | ஏற்கனவேயுள்ள வரி | புதிய வரி | ஏற்கனவேயுள்ள வரி | புதிய வரி |
| கலப்பு (பெற்றோல்/ டீசல் | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு 25 சதம் | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு 25 சதம் அல்லது ரூ.3,500 என்பவற்றில் குறைவானது | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு 50 சதம் | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு 50 சதம் அல்லது ரூ.5,500 என்பவற்றில் குறைவானது | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு ரூ.1.00 | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு ரூ.1.00 அல்லது ரூ.7,500 என்பவற்றில் குறைவானது |
| எரிபொருள் (பெற்றோல்/ டீசல்) | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு 50 சதம் | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு 50 சதம் அல்லது ரூ.3,500 என்பவற்றில் குறைவானது | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு ரூ.1.00 | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு ரூ.1.00 அல்லது ரூ.5,500 என்பவற்றில் குறைவானது | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு ரூ.1.50 | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு ரூ.1.50 அல்லது ரூ.7,500 என்பவற்றில் குறைவானது |

**பந்தயம் மற்றும் சூதாட்ட தீர்வை**

| | | |
|---|---|---|
| இனிவரவிருப்பவை | - | ருட்ஜினோ விளையாட்டினைத் தவிர ஏனைய விளையாட்டுக்களை நடத்துகின்ற வியாபாரங்கள் மீதான வருடாந்தத் தீர்வையினை ரூ.200 மில்லியனிலிருந்து ரூ.400 மில்லியனுக்கு அதிகரித்தல் |
| | - | ருட்ஜினோ விளையாட்டினை நடாத்துகின்ற வியாபாரங்கள் மீதான வருடாந்தத் தீர்வையினை ரூ.1 மில்லியனாக விதித்தல் |
| | - | தனிநபர் ஒருவருக்கான கசினோவின் நுழைவுக் கட்டணம் ஐ.அ.டொலர் 100 இலிருந்து ஐ.அ.டொலர் 50 இற்குக் குறைத்தல் |
| | - | மொத்தச் சேகரிப்பு மீதான கட்டணங்கள் 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரித்தல் |

**ஏனைய வரிகள் மற்றும் தீர்வைகள்**

| | | |
|---|---|---|
| இனிவரவிருப்பவை | - | பன்னாட்டுத் தொலைத் தொடர்பூட்டல் தொழிற்படுநர் தீர்வையனை நீக்குதல் |
| | - | பயணி ஒருவருக்கான கப்பலேறும் கட்டணம் ஐ.அ.டொலர் 10 இனால் ஐ.அ.டொலர் 60 இற்கு அதிகரித்தல் |

**ஏனைய கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்**

| | | |
|---|---|---|
| 2018 சனவரி 01 | - | வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் திருத்தப்பட்டது. |
| 2018 ஏப்பிறல் 01 | - | போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளிற்கான உரிமக் கட்டணம் ரூ.1,000,000 இலிருந்து ரூ.500,000 இற்குக் குறைக்கப்பட்டது. |
| 2018 ஏப்பிறல் 16 | - | கள் இறக்குவதற்கான உரிமக் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | - | கடந்த 03 ஆண்டுகளாகத் திருத்தப்படாத அரச முகவர்களின் கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் வீதத்தினை 15 சதவீதத்தினால் அதிகரித்தல் |
| | - | கடவுச்சீட்டுக் கட்டணத்தினைப் பின்வருமாறு திருத்துதல் |
| | | - அலகு ஒன்றிற்கான திருத்தக் கட்டணம் ரூ.500 இலிருந்து ரூ.1,000 இற்கு |
| | | - அலகு ஒன்றிற்கான செயன்முறைக் கட்டணம் (அவசர அடிப்படையில்) ரூ.10,000 இலிருந்து ரூ.15,000 இற்கு |
| | | - அலகு ஒன்றிற்கான செயன்முறைக் கட்டணம் (சாதாரண அடிப்படையில்) ரூ.3,000 இலிருந்து ரூ.3,500 இற்கு |

**அரசாங்க செலவினம்**

| | | |
|---|---|---|
| 2018 பெப்புருவரி 21 | - | இலங்கைப் பொறியியல் பணியிலுள்ள பொறியியல் வல்லுனர்களுக்கு பட்டய பொறியியலாளர்களின் படிக் கொடுப்பனவுகளுக்கான 2018/04ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. |
| 2018 மே 04 | - | 2018 யூன் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அதேநேர கணனி வழியூடாக மரணப் பணிக்கொடை கொடுப்பனவுகள் வழங்குவதற்கான 2015/09ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை (திருத்தம் III) வழங்கப்பட்டது. |
| 2018 மே 24 | - | ஓய்வூதிய கொடுப்பனவு செயன்முறையை துரிதப்படுத்துவதற்கும் முறைப்படுத்துவதற்குமான 2018/07ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2018 யூன் 24 | - | வேலைத்தளத்தில் ஏற்படும் இடர்பாடுகளால் நோய்வாய்ப்படல் அல்லது தொடர்பான அலுவலரிற்கு கடமை நேரத்தில் உயிரிழப்பு ஏற்படின் அரச அலுவலரொருவரில் தங்கியிருப்போருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கான 2018/08ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கை வழங்கப்பட்டது |
| இனிவரவிருப்பவை | - | அனைத்து அரச துறை ஊழியர்களுக்கும் இடைக்காலப் படிக் கொடுப்பனவொன்றாக மாதமொன்றுக்கு ரூ.2,500 இனை வழங்குதல் |

| | | |
|---|---|---|
| | - | ஓய்வுபெறும் காலத்தில் ஓய்வூதியரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைச் சம்பளத்திற்கான 2016/03ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கையில் முதல் இரண்டு பகுதிகளையும் ஒன்றிணைத்து ஓய்வூதியக் கொடுப்பனவினைத் திருத்துதல் |

### படுகடன் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| 2018 சனவரி 09 | - | 2018இற்கான இலங்கை அபிவிருத்தி முறிகளை ஐ.அ.டொலர் 3,000 மில்லியன் எல்லை வரை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது. |
| 2018 மார்ச்சு 27 | - | நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளினூடாக ஐ.அ.டொலர் 5,000 மில்லியன் எல்லை வரையான, மொத்த வெளிநாட்டு நாணயக் கடன்பெறுகைகளுள் 2018இற்கான நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை ஐ.அ.டொலர் 2,500 மில்லியன் எல்லை வரை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது. |
| 2018 மார்ச்சு 28 | - | பாராளுமன்றத்தினால் 2018ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க நடைமுறைப் பொறுப்பு முகாமைத்துவ சட்டம் வழங்கப்பட்டது. |
| 2018 ஒத்தோபர் 26 | - | 2018ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க நடப்புப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்திற்கிணங்க பிரிதிறனை ரூ.310 பில்லியனாக உயர்த்துவதற்கு பாராளுமன்றம் ஒப்புதலளித்துள்ளது. |

### ஏனையவை

| | | |
|---|---|---|
| 2018 யூலை 12 | - | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சினால் உந்து ஊர்திகளின் இறக்குமதி, தயாரித்தல் அல்லது திரட்டுதல் மீது வெளிப்படுத்தல் நியமங்களை அறிமுகப்படுத்துவதற்கான 2079/42ஆம் இலக்க விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. |
| 2018 யூலை 13 | - | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான வெளிப்படுத்தல் நியமங்கள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கான 2079/70ஆம் இலக்க விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. |
| 2018 நவெம்பர் 01 | - | ஊர்திகள் உரிமை வழங்கல் கட்டணம், காபன் வரி, வருடாந்தக் கம்பனிப் பதிவுக் கட்டணம், படுகடன் மீள்கொடுப்பனவுக் கட்டணம், செலூலர் கோபுரக் கட்டணம், செல்லிடக் குறுஞ்செய்திப் பணிகள் மீதான திருத்தப்பட்ட ஆடம்பர வரி என்பவற்றினை விதித்தல் தொடர்பாக பாராளுமன்றத்தினால் 2018ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க நிதிச் சட்டம் இயற்றப்பட்டது. |